# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

## ஆணை நாள். 01.04.2026

## முன்னிலை
## திரு அபய் குமார் சிங், இகாப (ஓய்வு)
## மாநில தகவல் ஆணையர்

*****

**வழக்கு எண். SA 20532/F/2023**

| | | |
|---|---|---|
| திரு.ப.முருகேசன், | -- | மேல்முறையீட்டாளர் |

*/எதிர்/*

| | | |
|---|---|---|
| பொதுத் தகவல் அலுவலர் / தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம்(கோவை) லிமிடெட், எண்.37, மேட்டுப்பாளையம் சாலை, கோயம்புத்தூர் மாவட்டம்-641 043. | -- | பொது அதிகார அமைப்பு |

**ஆணை**

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தில் இன்று (01.04.2026) முற்பகலில் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இன்றைய விசாரணைக்கு மனுதாரர் திரு.ப.முருகேசன், அவர்கள் ஆஜராகவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு விதிகள், 2012) விதி 7(2)-ன்படி மனுதாரர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாகும். அவரது வருகையின்மை பதிவு செய்யப்பட்டது. பொது அதிகார அமைப்பின் சார்பாக பொதுத் தகவல் அலுவலர், திரு.க.சி.கண்ணன், துணை மேலாளர் (கட்டிடம்-கூட்), தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம்(கோவை) லிமிடெட், கோயம்புத்தூர் மாவட்டம் அவர்கள் ஆணையத்தின் முன் நேரில் ஆஜரானார்.

2. மனுதாரர் 06.09.2023 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், “திருப்பூர் மண்டலம் அலுவலகத்திற்குட்பட்ட திருப்பூர் கிளையில்-1-ல் கடந்த 02.08.2023 அன்று உள்ளக விசாரணை சம்மந்தமாக கலந்துகொண்ட பணியாளர்கள் எத்தனைபேர் மற்றும் பணியாளர் உள்ளக விசாரணை சம்பந்தமாக பதிவு செய்த பதிவேட்டின் நகல் வழங்கவும்” என்பன போன்ற தகவல்களை 4 இனங்களில் வழங்கக் கோரி பொதுத் தகவல் அலுவலர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம்(கோவை) லிமிடெட், கோயம்புத்தூர் மாவட்டம்-641 043 அவர்களுக்கு மனு தாக்கல் செய்துள்ளார்.

3. மனுதாரர் பொதுத் தகவல் அலுவலரிடமிருந்து தகவல்கள் வழங்கப்படவில்லை என 11.10.2023 தேதியிட்டு பிரிவு 19(1)-ன் முதல் மேல்முறையீட்டு மனுவை மேல்முறையீட்டு அலுவலருக்கு அனுப்பியுள்ளார். அதன் பின்னர், மனுதாரர் மேல்முறையீட்டு அலுவலரிடமிருந்தும் தகவல்கள் பெறப்படாததால் 22.11.2023 தேதியிட்டு பிரிவு 19(3)-இன் கீழ் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவினை இவ்வாணையத்திற்கு தாக்கல் செய்துள்ளார். அவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு 01.04.2026 முற்பகல் இவ்வாணையத்தில் வைத்து நேரடி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணைக்கு ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் மனுதாரர் கோரிய தகவல்கள் குறித்து கடித எண்.8608/த1/17488/தஅஉச/தஅபோக(கோ)/2023, நாள் 04.10.2023, மற்றும் கடித எண்.1068/த1/17488/தஅஉச/தஅபோக(கோ)/2025, நாள் 12.03.2025 தேதியிட்ட கடிதங்களின் வாயிலாக, மனுதாரருக்கு இனம் வாரியாக ஒப்புகை அட்டையுடன்கூடிய பதிவஞ்சலில் தகவல்கள் அனுப்பப்பட்டுள்ளதாகவும், அதனை மனுதாரரும் பெற்றுக்கொண்டு ஏற்பளிப்பு செய்த ஒப்புகை அட்டையின் நகலையும் இணைத்து ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார்.

5. இன்றைய விசாரணையின் முடிவில், மனுதாரர் கோரிய தகவல்கள், அவருக்கு வழங்கப்பட்ட தகவல்கள் ஆகியவற்றை ஆணையம் பரிசீலனை செய்கையில், மனுதாரருக்கு உரிய, சரியான தகவல்கள் கடித எண்.8608/த1/17488/ தஅஉச/தஅபோக(கோ)/2023, நாள் 04.10.2023, மற்றும் கடித எண்.1068/ த1/17488/ தஅஉச/ தஅபோக(கோ)/2025, நாள் 12.03.2025 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக பொது அதிகார அமைப்பால் வழங்கப்பட்டுள்ளது என்று ஆணையம் பதிவு செய்து, ஏற்றுக்கொள்கிறது. இதுகுறித்து மனுதாரரின் கருத்துக்களையும், வாதங்களையும் தெரிவிக்க அவருக்கு வாய்ப்பளிக்கப்பட்டிருந்தும் அவர் இன்றைய விசாரணைக்கு (01.04.2026) ஆஜராகத் தவறியுள்ளார். **எனவே, இப்புகார் மனுவின் மீதான விசாரணையை இத்துடன் முற்றாக்கம் செய்து, பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையம் கீழ்க்கண்ட உத்தரவினைப் பிறப்பிக்கின்றது.**

- **மனுதாரரின் 06/09/2023 தேதியிட்ட தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கீழான மனுவிற்கு உரிய காலத்திற்குள் (30 தினங்களுக்குள்) தகவல்களை வழங்காததற்காக அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் திரு.மா.பாலகிருஷ்ணன், துணை மேலாளர் (துணி-கூட்), தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கோவை)லிமிடெட், கோயம்புத்தூர் மாவட்டம் அவர்கள் மீது தகவல் பெறும் உரிமைச் சட்ட பிரிவு 20(1)ன் கீழ் நாள் ஒன்றுக்கு ரூ.250/- வீதம் ரூ25,000/- தண்டம் ஏன் விதிக்கக்கூடாது என்பதற்கான அவரது எழுத்துமூல விளக்கத்தினை இவ்வாணையத்திற்கு 30.04.2026 அன்று நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு அப்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையத்தால் உத்தரவிடப்படுகிறது.**

**ஒம்/-(அபய் குமார் சிங்)**
**மாநில தகவல் ஆணையர்**

**ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

<u>**வழக்கு எண். SA 20532/F/2023**</u>
**பெறுநர்**
<u>**பொது அதிகார அமைப்பு**</u>

பொதுத் தகவல் அலுவலர் /
தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கோவை) லிமிடெட்,
எண்.37, மேட்டுப்பாளையம் சாலை,
கோயம்புத்தூர் மாவட்டம்-641 043.

***அப்போதைய பொதுத் தகவல் அலுவலர்***
***திரு.மா.பாலகிருஷ்ணன்,***
***துணை மேலாளர் (தணி-கூட்),***
***தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கோவை)லிமிடெட்,***
***கோயம்புத்தூர் மாவட்டம்.***

***(தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் வாயிலாக)***

<u>**மனுதாரர்**</u>

திரு.ப.முருகேசன்,
த/பெ.பழனிச்சாமி,
1/157, எலையமுத்தூர் அஞ்சல்,
உடுமலைப்பேட்டை தாலுகா,
திருப்பூர் மாவட்டம்-642 154.

<u>**நகல்**</u>
பதிவாளர்,
தமிழ்நாடு தகவல் ஆணையம்,
சென்னை-35.
Copy to: File NS/PA-